2006 ஆகஸ்ட் 23]

11–8–2006–லே திருச்சி அருகிலே, பூலாங்குடி என்கின்ற பகுதியில் பிங்கிலி என்பவர், அந்த மயில்களுடைய கால்களையெல்லாம் பயன்படுத்தி, லேகியம் தயாரித்து, வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக, அந்தத் தயாரிப்பு முறையிலே ஈடுபட்டிருந்த நேரத்தில், வனத் துறை அதிகாரிகளுக்கு அந்தச் செய்தி தெரிந்து, அவர்கள் அங்கு சென்று அவற்றையெல்லாம் பறிமுதல் செய்கின்ற நேரத்தில், பிங்கிலி என்பவர் தப்பித்துச் சென்றுவிட்டார். இருந்தாலுங்கூட, அவர் வைத்திருந்த மூன்று மயில் கால்கள், இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள் மற்றும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு நரித் தலை இவற்றையெல்லாம் பறிமுதல் செய்து வந்திருக்கிறார்கள். எனவே, மயில்களுக்கோ அல்லது மற்ற வன விலங்குகளுக்கோ எந்தப் பகுதியிலேயும் மறைமுகமாகச் செய்யப்படுகின்ற, அந்த இன்னல்களையெல்லாம் போக்குவதற்கு, தலைவர் கலைஞருடைய இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும், பாதுகாப்புகளையும் ஏற்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வனத் துறை சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், முடியாது. (குறுக்கீடு) முடியாது, உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

78—

மதிய உணவு

1531—திரு. கே.பி. இராமசுவாமி:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராசிபுரம் தொகுதியில் ஜவ்வரிசியை மதிய உணவுத் திட்டத்தில் சேர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள கலோரி மற்றும்...(குறுக்கீடு)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2006 ஆகஸ்ட் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்களம்மா!

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள கலோரி மற்றும் புரதச்சத்து அளவினைக் காட்டிலும் கூடுதலான கலோரி மற்றும் புரதச்சத்து நிறைந்த சத்துணவை ஏற்கெனவே நமது அரசு செம்மையாக வழங்கிக் கொண்டு வருகிறது. தற்போது மதிய உணவுத் திட்டத்தில் ஜவ்வரிசியைப் பயன்படுத்துவதில்லை. அதுபோன்ற திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வரிசி உற்பத்திமூலம் கிட்டத்தட்ட நம்முடைய தமிழகத்திலே 16 மாவட்டங்களிலே சுமார் 800 ஆலைகள் இருக்கின்றன. அவற்றிலே இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதனுடைய மூலப்பொருளான மரவள்ளிக்கிழங்கை, கிட்டத்தட்ட 16 மாவட்டங்களிலே பயிர் செய்து, ஒரு இலட்சம் விவசாயக் குடும்பங்கள் அதன்மூலம் பயன்பெற்று வருகின்றன. குறிப்பாக, மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய போகமலை, கிடமலை, கொல்லிமலை, பச்சமலை, கல்வராயன் மலை போன்ற இந்தப் பகுதிகளிலே, கிழங்கு அதிகமான அளவிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், வருடத்திற்கு 30 இலட்சம் மூட்டைகள் ஜவ்வரிசி உற்பத்தி செய்யப்பட்டு, வட மாநிலங்களில்தான் அதைப் பெரும்பாலும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சத்துணவிலே, குழந்தைகளுக்கு அதைச் சேர்ப்பதன்மூலம், அதிலே protein சத்தும், carbohydrate-ம் இருக்கின்ற காரணத்தால், அது எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவு என்பதால், நம்முடைய தமிழக முதல்வர், விவசாயிகளின்மேல் பற்றும் பாசமும் கொண்ட நம்முடைய கழக அரசு, அதைக் குழந்தைகளுக்கு வழங்குவதன்மூலம் சிறுவயதிலிருந்தே அதைச் சாப்பிடுவார்களேயானால், நிறைந்த ஊட்டச் சத்து கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது; ஆகவே, இதை அரசு, சத்துணவிலே சேர்ப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

2006 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிய சத்துணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்கள், தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியாக வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட தொகுதியில் மட்டும் வழங்கப்படும் உணவுப் பொருட்களை மாற்றி வழங்குவது மற்றும் புதியதாகச் சேர்ப்பது என்பது இயலாது. எனினும், சட்டமன்ற உறுப்பினரின் விளக்கவுரையை நான் கேட்டறிந்து, ஊட்டச் சத்து நிபுணர்களைக் கலந்தாலோசித்து, அதைப் பரிசீலிக்க முயற்சி எடுப்பேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மட்டும் வழங்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற, சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு இதை வழங்குவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

கால்நடை மருந்தகம்

***1915—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, கோவில்பாளையம் கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாக நிலை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் கோவில்பாளையம் கால்நடை கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.